பெருநகர சென்னை மாநகராட்சி

தேர்தல் செய்தி வெளியீடு

தே.செ.வெ.எண்.46 நாள் : 14.04.2024

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, பாராளுமன்றத் தேர்தல்-2024 வருகின்ற 19.04.2024 அன்று தமிழ்நாட்டில் ஒரே கட்டமாக நடைபெற உள்ளது. இதனையொட்டி சென்னை மாவட்டத்தில் உள்ள 3 பாராளுமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் அமைந்துள்ள வாக்குச்சாவடி மையங்களில் பணிபுரிய நியமிக்கப்பட்ட, தபால் வாக்கு செலுத்தாத வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு நாளை 15.04.2024 காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை சென்னை மாவட்ட மூன்று பாராளுமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட (தென் சென்னை, வட சென்னை (ம) மத்திய சென்னை) 16 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள பயிற்சி மையங்களில் வாக்களிக்க ஏதுவாக சிறப்பு வாக்குச்சாவடி (Facilitation Centre) மையங்களில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

எனவே தபால் வாக்கு செலுத்தாத அனைத்து வாக்குச்சாவடி அலுவலர்கள் மேற்கூறிய பயிற்சி நடைபெற்ற 16 மையங்களுக்கு தகுந்த ஆவணங்கள் மற்றும் அடையாள அட்டையுடன் சென்று வாக்களிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி